| ஒப்பந்தம்சார் சேவைகள் | **21** | 1,719,164 | 3,832,023 |
| ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | **22** | 634,189 | 725,340 |
| தேய்மானமும் கடன் தீர் செலவினமும் | | 8,295,730 | 7,677,136 |
| பிற இயக்க செலவுகள் | **23** | 10,420,540 | 9,341,455 |
| மஹாபொல | | 5,896,400 | 2,396,600 |
| நிதியம் | | 14,354,100 | 13,412,700 |
| ஆராய்ச்சி வலுவூட்டலுக்கான செலவுகள் | | 135,754 | 150,000 |
| தலைமை தாங்கும் அபிவிருத்திச் செலவுகள் | | 50,000 | 0 |
| மாணவர்களை மையப்படுத்திய கல்விக்கான செலவுகள் | | 80,000 | 0 |
| **மொத்த இயக்கச் செலவுகள்** | | **160,329,288** | **137,658,274** |
| **மிகை.'.துண்டுவிழும் தொகை இயக்க நடவடிக்கைகளிலிருந்து** | | **(3,754,212)** | **(682,036)** |

**எஸ்.பி.டி. பீரிஸ்**
**சிரேட்ட உதவிப் பொருளாளர்**

## தொழிநுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப்பல்கலைக்கழகம்
## 2015திசெம்பர் 31இல்முடிந்தஆண்டுக்கானநிகரச் சொத்துக்களிலானமாற்றங்கள் பற்றிய கூற்று

| | குறிப்புகள் | 10 மூலதனமானியம் செலவிடப் பட்டது ரூபா | 10ய காணிக்குசெலுத்தப் பட்டது ரூபா | 11 மூலதனமானியம் செலவுசெய்யப் பட்டது ரூபா | 12 பொதுஒதுக்கம் ரூபா | 13 நன்கொடை ரூபா | 14 பணமல் லாதஅரசமானியம் ரூபா | 15 திரண்டநிதியம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2013திசெம்பர் 31இல் அன்றிருந்தநிலுவை** | | **31,442,352** | **37,784,571** | **15,469,651** | **(13,772,390)** | **3,975,000** | **7,250,000** | **20,669,842** | **102,819,026** |
| நிதிச் செயற்பாட்டு கூற்றில் கண்டுகொள்ளப்படாதநிகர இலாபமும் நட்டமும் | | (7,749,735) | 6,811,735 | | 1,604,122 | | | | 666,122 |
| மாற்றியவை.்.நிகரஅசைவுகள் | | 9,499,033 | 7,232,934 | (9,563,781) | | 118,286 | | (1,101,036) | 6,185,436 |
| மிகை.்.காலப்பகுதிக்கானதுண்டுவிழும் தொகை | | | | | (682,036) | | | | (682,036) |
| கடன்தீர் நிதியம் | | (6,087,136) | | | | | | | (6,087,136) |
| **2014திசெம்பர் 31அன்றிருந்தவாறுநிலுவை** | | **27,104,514** | **51,829,240** | **5,905,870** | **(12,850,304)** | **4,093,286** | **7,250,000** | **19,568,806** | **102,901,412** |
| மிகை.்.காலப்பகுதிக்கானதுண்டுவிழும் தொகை | | | | | | | | | |
| சொத்துக்களைமீளமதிப்பீடுசெய்ததில் குறை மாற்றங்கள் ∴ நிகரஅசைவுகள் | | 7,073,325 | 8,014,207 | (1861,288) | | | | 245,331 | 13,471,575 |
| நிதிச் செயற்பாட்டுக் கூற்றில் கண்டுணரப்படாதநிகர இலாபங்களும் நட்டங்களும் | | 0 | 0 | | 248,792 | | | | 248,792 |
| கடன் தீர்ப்பு | | (7,500,730) | | | | | | | (7,500,730) |
| மிகை∴ காலத்துக்கான (குறை) | | | | | (3,754,212) | | | | (3,754,212) |
| **2015திசெம்பர் 31 அன்றிருந்தவாறுநிலுவை** | | **26,677,109** | **59,843,447** | **4,044,582** | **(16,355,724)** | **4,093,286** | **7,250,000** | **19,814,137** | **105,366,837** |

**எஸ்.பி.டி.பீரிஸ்**
**சிரேட்டஉதவிப் பொருளாளர்**

## தொழிநுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவை பல்கலைக்கழகம்
## 2015 திசெம்பர் 31இல் முடிந்த ஆண்டுக்கான
## பணவோட்டக்கூற்று

| | குறிப்புகள் | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **இயக்கும் நடவடிக்கைகளிலிருந்து பணவோட்டம்** | | | | | |
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்து மிகை∴ (துண்டுவிழும் தொகை) | | (3,754,212) | | (682,036) | |
| **காசு இல்லா அசைவுகள்** | | | | | |
| தேய்மானம் | | 8,295,730 | | 7,677,136 | |
| கடன்தீர் நிதி | | (7,500,730) | | (6,882,136) | |
| அதிகரிப்பு ∴ வீழ்ச்சி | | | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 846,088 | | 637,834 | |
| பிறசீராக்கல்கள் | 25 | 247,875 | | 2,401,208 | |
| **தொழிற்படுதலில் அதிகரிப்பு.∴வீழ்ச்சி** | | | | | |
| பெறவேண்டியவற்றில் அதிகரிப்பு.∴ வீழ்ச்சி | 26 | 2,148,216 | | 1,394,898 | |
| பின் போட்ட வருமானத்தில் (அதிகரிப்பு ∴ வீழ்ச்சி) | | | (14,341) | | 36,213 |
| செலுத்த வேண்டியவற்றில் (அதிகரிப்பு ∴ வீழ்ச்சி) | 27 | (1,587,970) | | (2,322,881) | |
| திரண்ட செலவுகளில் (அதிகரிப்பு ∴ வீழ்ச்சி) | | 443,295 | | (2,193,147) | |
| இயக்க நடவடிக்கைகளிலிருந்து நிகர பணவோட்டம் | | | (876,049) | | 67,089 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | | | |
| பொறித்தொகுதியும் சாதனமும் கொள்ளல் **(அட்டவணை டியும் சியும்)** | | (6,745,795) | | (8,944,013) | |
| காணிக் கொள்வனவுக்கான கொடுப்பனவு மூலதனம் | | (8,341,737) | | (7,879,766) | |
| ஏனைய கருத்திட்டங்களுக்கு கொடுப்பனவு | | (273,754) | | (7,879,766) | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர பணவோட்டம்** | | | (15,361,286) | | (16,823,779) |
| **நிதியளிப்பு நடவடிக்கைகளில் இருந்தான பணவோட்டம்** | | | | | |
| மூலதன மானியம் | 11 | 120,000,000 | | 7,000,000 | |
| மட்டுப்படுத்திய திகதியிலிருந்து அதிகரிப்பு ∴ வீழ்ச்சி | | 245,331 | | (1,101,036) | |
| நன்கொடைகளிலிருந்து அதிகரிப்பு ∴ வீழ்ச்சி | | 0 | | 118,286 | |
| நிதியளிப்பு நடவடிக்கைகளிலிருந்து நிகர பணவோட்டம் | | | 12,245,331 | | 6,017,250 |
| காசு மற்றும் காசுக்கு நிகரானவற்றில் நிகர அதிகரிப்பு ∴ வீழ்ச்சி | | | (3,992,004) | | (10,739,440) |
| காலத்தின் தொடக்கத்தில் இருந்த காசும் காசுக்குச் சமமானவையும் | | | 25,534,299 | | 36,273,739 |
| காலத்தின் முடிவில் காசும் காசுக்குச் சமமானவையும் | 28 | | 21,542,295 | | 25,534,299 |

**எஸ்.பி.டி.பீரிஸ்**
**சிரேட்ட உதவிப் பொருளாளர்**

## கணக்காய்வுக் குழு அறிக்கை

# 20. உள்ளகக் கணக்காய்வு அறிக்கை

உள்ளக கணக்காய்வுப் பகுதி, மொறட்டுவைப் பலக்லைக் கழக தொழிநுட்பவியல் நிறுவகத்தின் கணக்காய்வுக் கடமைகளை கணக்காய்வுக்குழு மற்றும் முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதற்கு அமைவாகவும் குறிப்பிடத்தக்களவு பிரதேசத்தை உள்ளடக்கிய விதத்திலும் கணக்காய்வாளர் அதிபதியின் ஒருப்பாட்டுடனும் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாகவும் பின்வரும் விதத்தில் கணக்காய்வுக் கடமைகளை நடாத்தியது..

1. **கணக்காய்வின் முன்**

- பல்கலைக்கழக ஏற்பாட்டு நிதியத்தை (ப.ஏ.நி.) விடுவித்தல்
- பணிக்கொடைக் கொடுப்பனவு
- ஓய்வூதிய நிதியத்தை விடுவித்தல்
- பிணை முறிகளைக் கணக்கிடுதல்
-

2. **காண்புகளில் வழங்கப்பட்ட கணக்காய்வு விசாரணை**

- காசுக் கொடுப்பனவுகளைச் சரிபார்த்தல்
- பணக்கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் மாதிரிகளைச் சரிபார்த்தல் - 2015

3. **நடாத்தப்பட்ட ஏனைய கணக்காய்வுச் செவ்வை பார்த்தல்**

- கொள்ளல் கட்டளைகளின் மாதிரி ஒன்றைச் செவ்வை பார்த்தல்
- வங்கிக் கணக்கிணக்கப்பாடுகளைச் செவ்வை பார்த்தல்
- பல்வகை முற்பணக் கொடுப்பனவுகளைச் செவ்வை பார்த்தல்

4. **கணக்காய்வுக் குழு**
மொ.ப.தொ.நி.தின் நடவடிக்கைகளை மீளாய்வுக் குழு ஆகக் குறைந்தது மூன்று மாதத்துக்கு ஒரு முறை மொ.ப.தொ.நி.தின் நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்கென ஒழுங்காகக் கூடுகின்றது. குழு கணக்காய்வு அறிக்கைகளையும் கணக்காய்வாளர் அதிபதியால் அனுப்பப்பட்ட விசாரணைகளையும் கவனத்திற் கொள்வதுடன் உள்ளக கணக்காய்வு மற்றும் அந்த விசாரணைகள் மட்டில் மொ.ப.தொ.நிறுவகத்தின் விடைகளையும் கவனத்திற் கொள்கின்றது. குழு சிபாரிசுகளையும் செய்கின்றது. அத்துடன் சரி செய்தல் நடவடிக்கைகளுக்கான கண்காணிக்கின்றது.

5. **பதவியினர்**
மொ.ப.தொ.நி.தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிக் கணக்காய்வாளரின் மேற்பார்வையின் கீழ் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வும் பிரிவில் உள்ள மொ.ப.தொ.நி. தால் நியமிக்கப்பட்ட எழுதுநர் ஒருவரால் மேற்கொள்ளப்படுகின்றது.

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பதவியினரும் மொ.ப.தொ.நி.தின் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தமது ஆதரவையும் வழங்குகின்றனர்.

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழிநுட்பவியல் நிறுவகத்தின் 2000ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 நியதிச் சட்டத்தின் படியும் 1978இன் இல.16 பல்கலைக்கழகச் செய் கட்டத்தின் பிரிவு 108

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எச்ஈடீ/சீ/ஜரீயூஎம்/1/15/02

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2016 செப்டெம்பர் 29

பணிப்பாளர்,
தொழில்நுட்ப நிறுவகம்,
மொறட்டுவை பல்கலைக்கழகம்.

**மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவனத்தின் பணிப்பாளருக்கு 2016 யூன் 26 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலத்தை இனங்காணும் போது ஏற்பட்ட வழுக்களின் காரணமாக ரூபா 47,450,180 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 **கணக்கீட்டுக் கொள்கை**

அரசாங்க மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமானத் தேய்வு தொடர்பாக காலக்கழிவு செய்யும் கொள்கை கணக்குகளின் ஊடாக வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 7,250,000 தொகையான தேறிய பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,901,167 வரை குறைவடைந்திருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறை வேலைக் கணக்கின் மீதியை பட்டோலையுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 891,200 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் நீண்ட கால முதலீடுகளின் பெறுமதி ரூபா 14,335,190 ஆக இருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்டுள்ள விரிவான அட்டவணைகளில் பெறுமதி ரூபா 14,164,403 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 170,787 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**2.3 பெற வேண்டிய கணக்குகள்**

உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,481,830 பணம் சேமலாப நிதியத்திலிருந்து அறவீடு செய்யும் இணக்கப்பாடு வெளியிடப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை | |
| | XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வரவை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 64,883,895 ஊதியம் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் உப பிரிவு | 2012 மே மாதத்தின் போது சேவையிலிருந்து இராஜினமா செய்த உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 38,080 மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து ரூபா 3,754,212 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 682,036 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பற்றாக்குறை ரூபா 3,072,176 இனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்காகக் கிடைத்த அரசாங்க மானியம் ரூபா 14,420,000 இனால் அதிகரித்திருந்த போதிலும், ஆளணி வேதனங்கள் ரூபா 19,313,843 இனால் அதிகரித்தமை பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

கடந்த 05 வருடங்களின் நிதி விளைவுகளை கவனத்தில் கொள்ளும் போது 2012, 2014 மற்றும் மீளாய்வாண்டில் நிதி விளைவில் பற்றாக்குறையைக் காண்பித்திருந்தது. ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறமானத் தேய்வு மற்றும் அரச வரிகளுக்கான சீராக்கங்களின் பின்னரான பங்களிப்பில் அதிகரிப்பினை காண்பித்திருந்ததுடன் அது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 11,152,226 ஆக இருந்தது.

4. **செயற்பாட்டு மீளாய்வு**

4.1 **செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்படுகின்ற கல்வித்துறைகளில் உயர்கல்வியை வழங்குதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற அடிப்படைப் பணிகள் பல்கலைக்கழகங்களினால் மேவுகை செய்யப்படுவதுடன் தொழில்நுட்ப நிறுவகம் நான்கு பீடங்களைக் கொண்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அதில் பதிவு செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 1220 ஆகும்.

(அ) மீளாய்வாண்டில் இறுதியாண்டிற்காக நடாத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளின்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 430 ஆக இருந்ததுடன் அதில் 296 மாணவர்கள் அதாவது 69 சதவீதம் பரீட்சையில் சித்தியடைந்திருந்ததுடன் 134 மாணவர்கள் அதாவது 31 சதவீதம் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஒவ்வொரு கல்விப் பிரிவுகளிலும் மாணவர்கள் முதலாம் வருட பரீட்சையில் 85 சதவீத சித்தி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் சித்தியடைந்திருந்த சதவீதம் 62 இற்கும் 74 இடைப்பட்டதாக இருந்தமையால் எதிர்பார்த்த இலக்கு அடையப்பெற்றிருக்கவில்லை.

4.2 **நிதியத்தின் குறைவான பயன்பாடு**

ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப நிறுவக அபிவிருத்தி என்ற இரண்டு நிதியங்களினதும் பெறுமதியான ரூபா 693,002 தொகை எவ்வித பணிகளிலும் ஈடுபடுத்தப்படாது 10 வருட அளவிலான காலம் முதல் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப நிறுவகத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளரின் மேற்பார்வையின் கீழ் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு இணைப்புச்செய்யப்பட்ட ஒரு எழுதுவினைஞரினால் நிறைவேற்றப்படுகின்றது. இது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்திறன் மற்றும் வினைத்திறன் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

(ஆ) அபிவிருத்தி செயற்திட்ட உத்தேச முறைமைகளின் செயன்முன்னேற்றத்தைத் தீர்மானித்தல், செயற்திட்டம் தொடர்பான பிரச்சினையான துறைகளை ஆராய்ந்து பார்த்தல், தளப்பரிசோதனைகளை மேற்கொள்ளல் போன்றன உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,000,000 தொகையான 18 உபகரண விடயங்கள் மற்றும் ரூபா 500,000 பெறுமதியான புத்தக இருப்புக்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்களை நியாயமான பெறுமதியில் கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமை |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக துரிதமாக நடவடிக்கை எடுக்காமை மற்றும் காணப்படும் சட்ட, விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை.<br>கடன் அறவிடல் முறைப்படுத்தப்பட்டு துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

ஒப்பம் :- எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழிநுட்பவியல் நிறுவகத்தின் 2000ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 நியதிச் சட்டத்தின் படியும் 1978இன் இல.16 பல்கலைக்கழகச் செய் கட்டத்தின் பிரிவு 108 (1)இன்படியும் 2015 திசம்பர் 31ஆம் திகதியன்று முடிந்த ஆண்டுக்கான மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழிநுட்பவியல் நிறுவகத்தின் நிதிக்கூற்றுகளிலான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான விடைகள்.

| கணக்காய்வுக் கருத்து | விவரணம் ∴ எடுத்த நடவடிக்கை |
|---|---|
| **நிதிசார் கூற்றுக்கள்** | **நிதிசார் கூற்றுக்கள்** |
| **2.2. நிதிக்கூற்றுகளிலான கருத்துரை** | **2.2. நிதிக்கூற்றுகளிலான கருத்துரை** |
| **2.2.1. கணக்கிடுதலில் குறைபாடுகள்** | **2.2.1. கணக்கிடுதலில் குறைபாடுகள்** |
| ரூ47இ450இ180 பெறுமதியான சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட போதும் இலங்கை அரசாங்கத் துறைக் கணக்கிடுதல் நியதி 03இன் படி நடைமுறையில்லாச் சொத்துக்களுக்கான பிரயோக வாழ்வுக் காலத்தை இனங்காணுதலில் நிகழ்ந்த தவறுகளின் காரணமாக அவை மேலும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. ஆயின் மதிப்பிடப்பட்ட தவறுகளைச் சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2015 திசம்பர் 31இல் முடிந்த ஆண்டுக்கான சொத்துக்கள் மட்டிலான அளவீடு மட்டில் அறிக்கையினைக் கவனத்தில் கொள்ளுமிடத்து பாவிப்பதற்குப் பொருத்தமற்ற சொத்துக்கள் இனங்காணப்பட்டு அச்சொத்துக்கள் உபயோகத்துக்குப் பொருத்தமற்றவற்றை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைப்பதற்கான நடவடிக்கை இந்த நாட்களில் மேற்கொள்ளப்படுகின்றது. சொத்துக்களின் மீள் மதிப்பீடு தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் படி ஒரு நிறுவகம்சார் குழுவை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2016 திசம்பர் 31அளவில் மீள் மதிப்பீட்டு நடவடிக்கையைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| **2.2.2. கணக்கிடுதல் கொள்கைகள்** | **2.2.2. கணக்கிடுதல் கொள்கைகள்** |
| அரசாங்கம் மானியங்களின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட சொத்துக்களின் தேய்மானம் தொடர்பில் கடன் தீர் கொள்கை கணக்குகளின் காட்டப்படவில்லை என்பதுடன் 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிகரப் பெறுமானமான ரூ7இ250இ000மீளாய்வு ஆண்டுக்காலத்தின் இறுதியளவில் ரூ1இ901இ167வரை குறைக்கப்பட்டுள்ளது. | நிதிசாரா அரசாங்க நன்கொடையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்களின் தேய்மானம் தொடர்பில் 2016ஆம் ஆண்டு தொடக்கம் நிறுவகத்தின் கணக்கிடுதல் கொள்கையாய் இருந்துவரும் நிதிக்கூற்றுகளில் வெளிக்காட்டுவது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| **2.2.3. விளக்கம் தரப்படாத வித்தியாசங்கள்** | **2.2.3. விளக்கம் தரப்படாத வித்தியாசங்கள்** |
| பின்வருவன அவதானிக்கப்பட்டன | |
| (ஏ) மீளாய்வு ஆண்டுக்காலத்தின் திசம்பர் 31 அன்றிருந்தவாறான நிதி நிலைமைக் கூற்றை அட்டவணையுடன் நடைபெறும் வேலையுடன் நிறுவையை ஒப்பிடுமிடத்து ரூ891இ200என்னும் தொகைக்கான ஒரு வித்தியாசம் காணப்பட்டது. | நடைபெறும் அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைக்கென நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வைப்புப் பணமாக ரூ2இ391இ200.00என்னும் தொகை செலுத்தப்பட்டது. அதன் பின் உயர்கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூ1இ500இ000.00என்னும் தொகையை சீர் செய்ததன் பின் அதே அமைச்சுக்கு திரும்பச் செலுத்தியதன்பின் இந்த நிறுவையின் தொகையான ரூ891இ200பூஜ்யப் பெறுமானமாக இருக்கும். |
| (பீ) மீளாய்வு ஆண்டுக்காலத்தின் போது நிதி நிலைமைக் கூற்றின் நியதிகளின்படி நெடுந்தவணை முதலீடுகளின் பெறுமானம் ரூ14இ335இ190என்னும் தொகையாக இருந்தாலும் விபரக் குறிப்பீடு சமர்ப்பிக்கப்பட்ட தொகையான ரூ14இ164இ403எனக் குறிப்பிட்டதன் காரணமாக வித்தியாசம் ரூ170இ787காணப்பட்டது. | (பீ) மீளாய்வு ஆண்டுக் காலத்தின் நிதிக்கூற்றுக் களின்படி நெடுந்தவணை முதலீட்டுப் பெறுமானமான ரூ14இ335இ100.00 நிதிக் கூற்றுகளின் இல.10திலுள்ள இல 4 ஆம் கூற்றுடன் கணக்கிலக்கம் செய்யப்படலாம். இப்பெறுமானம் இல. 36ஆம் பக்கத்திலுள்ள விரிவான கூற்றில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டியிருந்தபோதும் அது ரூ14இ164இ403.00 எப்பிணையாக உட்சேர்க்கப பட்டுள்ளது |
| **2.3. கணக்குகள் பெறவேண்டியவை** | **2.3. கணக்குகள் பெறவேண்டியவை** |
| ஒப்பந்தத்தை மீறிய ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டியதான ஏற்பாட்டு நிதியத் தொகையான ரூ3இ481இ830 அறவிடுவதற்கான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட போதும் 2015 திசம்பர் 31வரைதானும் இப்பணம் அறவிடப்படவில்லை. | தொழிநுட்பவியல் நிறுவகத்தின் பணிப்பாளரால் 06.01.2015ஆம் திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட ஐ.ரி.யு.எம். ∴ எசிஜ ∴ பிஎப ∴ 10 இலக்கம் கொண்ட கடிதத்தின் படி ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூ1இ561இ148.33ஆகும். ஏற்பாட்டு நிதியத்திலிருந்து அறவிடப்படத் தேவையான ஏற்பாட்டு நிதியத்துக்கான படிவங்களை விடுவிப்பதற்கான கோரிக்கை 26.08.2016ஆம் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. |

<table>
<tr><th colspan="2">2.4. சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காணல்</th><th>2.4. சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காணல்</th></tr>
<tr><td colspan="2">பின்வரும் சந்தர்ப்பங்களில் இணங்காமை அவதானிக்கப்பட்டது.</td><td></td></tr>
<tr><td>சட்டங்கள் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள்</td><td>இணங்காமை</td><td rowspan="3">(ஏ) பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் ஒழுங்கு முறை தொழிநுட்பவியல் நிறுவகத்துக்கும் பொருந்துவதால் இதன் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மதியுரைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>(ஏ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்குமான தாபனக்கோவை</td><td></td></tr>
<tr><td>அத்தியாயம் ஓஓ இன் பிரிவு 3.1</td><td>கல்விசார் பதவியினரின் வரவு உறுதிப்படுத்தப் படாது மீளாய்வு ஆண்டின் போது ரூபா 64இ883இ895 என்னும் தொகை வேதனா திகளாகச் செலுத்தப்பட் டுள்ளது.</td></tr>
<tr><td>சட்டங்கள் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள்</td><td>இணங்காமை</td><td rowspan="3">(பீ) 2012 மேயில் சேவையை விட்டு விலகிய ஒரு உத்தியோகத்தரின் ஏற்பாட்டு நிதியத்திலிருந்து அறவிட வேண்டிய ரூ38இ000 க்கான படிவங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>(பீ) இலங்கை சன நாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை</td><td></td></tr>
<tr><td>அத்தியாயம் ஓஓஐஏ இன் உப-பிரிவு 4.2.5</td><td>2012 மேயில் சேவை யிலிருந்து விலகிய ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவையாக ரூ38இ080 மீளாய்வு ஆண்டின் திசம்பர் 31வரை அறவிடப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td colspan="2">3. நிதி மீளாய்வு</td><td>3. நிதி மீளாய்வு</td></tr>
<tr><td colspan="2">3.1 நிதிசார் விளைவுகள்</td><td>3.1 நிதிசார் விளைவுகள்</td></tr>
<tr><td colspan="2">நிறுவகத்தின் செயற்பாடு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி ஆண்டின் இறுதியில் ரூ3இ754இ212 துண்டுவிழும் தொகையாக அமைந்தது. இது இதே அளவு முன்னை ஆண்டுக்கான காலப்பகுதிக்கு ரூ682இ036 என்னும் தொகையே துண்டுவிழும் தொகையாக இருந்தது. ஆகவே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து மீளாய்வு ஆண்டின் போதான துண்டுவிடும் தொகை ரூ3இ072இ176 என்னும் தொகையால் அதிகரித்திருப்பதை வெளிப்படையாக காட்டுகின்றது. மீளாய்வு ஆண்டுக்கென அரசாங்கத்திடமிருந்து மீண்டுவரும் செலவுக்கான மானியமாகப் பெறப்பட்ட தொகை ரூ14இ420இ000 த்தால் அதிகரித்து இருந்த போதும் ஆளணியினருக்கான வேதனாதிகள் ரூ19இ313இ843 ஆல் அதிகரித்ததே இத்துண்டு விழும் தொகையிலான அதிகரிப்புக்குப் பிரதான காரணமாகும்.<br>முன்னைய ஐந்து ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளை ஒப்பிடுமிடத்து, 2012, 2014 மற்றும் இந்த மீளாய்வு ஆண்டுக்கான நிதி விளைவுகளும் துண்டு விழும் தொகையையே காட்டின. ஆளணி வேதனாதிகளிலான நடைமுறைக் கணக்கு அல்லாத சொத்துக்களிலும் அரசாங்க வரிகள் என்பன வற்றிலான தேய்மானத்துக்கான சீராக்கல்களைச் செய்த பின்பு உதவுதொகைகளில் ஒரு முன்னேற்றத்தைக் காட்டியதுடன் மீளாய்வு ஆண்டுக் காலத்தின் இறுதியளவில் இது ரூ11இ152இ226 என்னும் தொகையாக இருந்தது.</td><td>ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>நிறுவகம் வருமான வரி செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதனால் வரியிடலுக்கு முன்போ வரியிடலுக்குப் பின்போ நிகர இலாபம் எதுவும் கணக்கிடப்படுவதில்லை என்பதுடன் ஒன்றில் மிகையோ அல்லது துண்டுவிடும் தொகையோ மட்டும் தான் உறுதி செய்யப்படுகின்றது.</td></tr>
</table>

| | |
|---|---|
| **4. இயக்க மீளாய்வு** | **4. இயக்க மீளாய்வு** |
| **4.1 செயற்பாடு** | **4.1 செயற்பாடு** |
| பின்வருவன அவதானிக்கப்பட்டன | |
| ஏற்பாடு செய்தல் மற்றும் 1978இன் இல. 16 பல்கலைக்கழகங்கள் செயல்திட்டத்தின் நியதிகளின்படி கல்வித்துறையில் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் பணிகள் ஒரு பல்கலைக்கழகத்தால் கவனிக்கப்படுகின்றன. தொழிநுட்பவியல் நிறுவகம் நான்கு பீடங்களை உள்ளடக்கியிருப்பதுடன் மீளாய்வு ஆண்டுக்காலத்தின் இறுதியளவில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1220. | தொழிநுட்பவியல் நிறுவகத்தில் கல்விசார் பிரிவுகள் 05 உள்ளதுடன் மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் மாணவர்களின் எண்ணிக்கை 1023ஆகும். |
| (ஏ) மீளாய்வு ஆண்டுக்காலத்தின் போது நடாத்தப்பட்ட இறுதி ஆண்டுப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 430உம் 296மாகும். இவர்களுள் 69மூ பரீட்சையில் சித்தியடைந்ததுடன் 134 மாணவர்கள் அல்லது 31மூ ஆனவர்கள் பரீட்சையில் தவறிவிட்டனர். | பரீட்சை பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்வதற்குப் பொதுவாக மேற்கொள்ளப்படும் வழிமுறை யாதெனில் பரீட்சைக்கு முதல் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்டேயாகும். இதன்படி 345 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியதில் 260 மாணவர்கள் அல்லது 75மூஆனவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். எஞ்சியுள்ள 25மூனரில் பரீட்சையில் முழுமையாகத் தவறியவர்களையும் அல்லது பரீட்சையைப் பூரணப்படுத்துவதற்கு ஒன்றோ அல்லது இரண்டு பாடத்திலும் சித்தியடைய வேண்டிய மாணவர்களையும் உள்ளடக்கும். |
| (பீ) மீளாய்வு ஆண்டுக்கான நடவடிக்கைத் திட்டத்தின் நியதிகளின்படி ஒவ்வொரு பீடத்திலுமிருந்து முதலாம் ஆண்டுப் பரீட்சையில் 85மூ ஆன மாணவர்கள் சித்திய அடைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டதுடன் சித்தியடைந்த நூற்று வீதம் 62மூ தொடக்கம் 74மூ வரை என்பதால் எதிர்பார்த்திருந்த இலக்குகள் எய்தப்படவில்லை. | (பீ) மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளுக்குப் பல காரணிகள் உள்ளன என்பதுடன் செயற்திட்டத்தின்படி எதிர்பார்த்திருந்த சித்தியின் நூற்றுவீதம் 85மூ எனவும் இது பல்வேறு காரணங்களுக்கு மத்தியிலும் மிக விசேடமான பெறுபேறுகளைக் கொண்ட ஆண்டாகும் என்பதுடன் சித்தியடைந்த எண்ணிக்கையிலான ஏற்ற இறக்கத்துக்குப் பலதரப்பட்ட காரணங்கள் இருந்தது என்பதுடன் 62மூ தில் இருந்து 76மூ ஆகப் பெறுபேறுகளில் ஏற்பட்ட மாற்றத்துக்கான காரணம் அந்தத் தொகுதியைச் சேர்ந்த மாணவர்களிடம் காணப்பட்ட விசேட ஆற்றல்களே இதற்கான காரணமாகும். சித்தி வீதத்தை அதிகரிப்பதற்கு நிறுவகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கின்றது. |
| **4.2. நிதியை குறைவாகப் பயன்படுத்துதல்** | **4.2. நிதியை குறைவாகப் பயன்படுத்துதல்** |
| ரூ693இ002 என்னும் தொகையான இரண்டு நிதியங்களின் பெறுமானம் அதாவது ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் மற்றும் தொழில்நுட்ப நிறுவகம்சார் அபிவிருத்திக்கான தொகை 10 ஆண்டுக் காலமளவில் வேறு எதுவித உபயோகத்துக்கும் செலவு செய்யப்படாது குறைத்துச் செலவிடப்பட்டுள்ளது. | ஆராய்ச்சி அபிவிருத்திக்கும் தொழிநுட்பவியல் நிறுவகத்தின் அபிவிருத்திக்கும் தேவையான அடிப்படைத்துவம் தயாரிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| **5. பொறுப்புக்கூறலும் நல்ல ஆளுமையும்** | **5. பொறுப்புக்கூறலும் நல்ல ஆளுமையும்** |
| **5.1 உள்ளகக் கணக்காய்வு** | **5.1 உள்ளகக் கணக்காய்வு** |
| பின்வருவன அவதானிக்கப்பட்டன | |
| (ஏ) மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழிநுட்ப வியல் நிறுவகத்தின் கணக்காய்வுக் கடமைகள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவி உள்ளக கணக்காய்வரின் மேற்பார்வையின்ன கீழ் தொழிநுட்பவியல் நிறுவகத்திலுள்ள ஒரு எழுதுநரால் மேற்கொள்ளப்படும். இது உள்ளகக் கணக்காய்வுக் கூறின் ஆற்றலையும் பயனுறுதித் தன்மையையும் குறைவடையச் செய்துள்ளது. | (ஏ) தற்சமயம் நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வு வேலை நிறுகவத்திலேயே உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் உள்ள ஒரு எழுதுநரால் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உள்ளக கணக்காய்வாளர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் செய்யப்படுகின்றது. இப்போது அந்த எழுதுநர் உள்ளக இடமாற்றத்தக்கு உட்பட்டவர் அல்ல.<br><br>தியகம வளவில் தொழிநுட்பவியல் நிறுவகம் தாபிக்கப்பட்டதன் பின்பு உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஒன்று உண்டாக்கப்பட்டதன் பின்பும் தேவையான அளவு பதவியினருக்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி உள்ளக கணக்காய்வுப் பிரிவையும் அதன் பணியையும் வலுப்பெறச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (பீ) அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை தீர்மானித்தல் கருத்திட்டம் தொடர்பிலான பிரச்சினைப் பிரதேசங்கள் மற்றும் வேலைத் தலத்தைச் சோதனை செய்தல் போன்ற கடமைகளை உள்ளகக் கணக்காய்வு கூறு செய்யவில்லை. | (பீ) இந்த வேளையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு ஒரு உதவி உள்ளகக் கணக்காய்வாளரை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் கருத்திட்டங்களின் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சி திட்டத்தையும் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

<table>
<tr><th>5.2கொள்ளல் திட்டம்</th><th>5.2. கொள்ளல் திட்டம்</th></tr>
<tr><td>ரூ4இ000இ000 பெறுமதியான 18 பண்டங்கள் அடங்கிய சாதனங்களைக் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் ரூ500இ000 பெறுமானமுள்ள ஒரு தொகுதி நூல்களும் மீளாய்வு ஆண்டுக்கான கொள்ளல் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.</td><td>நிலையான சொத்துக்கள் கொள்ளல் தொடர்பில் உங்கள் கணக்காய்வு விசாரணை இல.எச்.இ.டி.∴சி.∴மொ.ப.தொ.நி.∴ 2.∴15.∴சி.∴04 இல் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட வீதங்கள் பிழையானவை என்பதுடன் இவ்வீதங்கள் பின்வரும் வீதத்தில் திருத்தப்பட வேண்டும்.<br><br><table>
<tr><th>சொத்து</th><th>உறு இலக்கம்</th><th>மதிப்பீட்டளவு</th></tr>
<tr><td>போட்டோ பிரதி பண்ணும் இயந்திரம்</td><td>02</td><td>1இ000இ00</td></tr>
<tr><td>மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பிரிவுக்கான சாதனம்</td><td>17</td><td>8இ500இ000</td></tr>
<tr><td>நூல்கள்</td><td></td><td>500இ000</td></tr>
</table><br>மேலும் இந்த வீதங்கள் வருமானம் மற்றும் செலவின மதிப்பீட்டில் சுட்டிக்காட்டப்பட்ட 03 விடயங்கள் மட்டிலுமானதே என்பதுடன் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ20.6 மில்லியன்களாகும். எவ்வாறாயினும் 2015ஆம் ஆண்டில் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மானியம் 7.0 மில்லியன் மட்டுமே நிலையான சொத்துக்கள் 2015ஆம் ஆண்டில் கொள்முதல் செய்த நிலையான சொத்துக்களின் எல்லை ரூ7.0 மில்லியன்களாகும்.</td></tr>
<tr><th>6. முறைமைகளும் கட்டுப்பாடும்</th><th>6. முறைமைகளும் கட்டுப்பாடும்</th></tr>
<tr><td>கணக்காய்வின் போது முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலும் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் யாவும் காலத்துக்குக் காலம் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பின்வருவன தொடர்பில் விசேட கவனம் லுெத்தப்பட வேண்டிய தேவை உள்ளது.</td><td></td></tr>
<tr><td><table>
<tr><th>முறைமைகளும் கட்டுப்பாட்டு பிரதேசமும்</th><th>அவதானிப்புகள்</th></tr>
<tr><td>(ஏ) சொத்துக்கள் முகாமைத்துவம்</td><td>கணக்குகளின் சொத்துக்களின் போது சொத்துக்களின் தெளிவான பெறுமானம் வெளிப்படுத்தப்படவில்லை.</td></tr>
<tr><td>(பீ) ஆளணியினர் நிருவாகம்</td><td>ஒப்பந்தங்களை மீறிய உத்தியோகத்தர்களுக்கெதிராக நடைமுறையிலுள்ள விதிகள், ஒழுங்குவிதிகளின்படி விரைவான நடவடிக்கை எடாமை.<br><br>ஆறவிட வேண்டிய கடன்கள் மட்டில் கடன்களை அறவிடுதலை ஒழுங்கமைத்து விரைவாகக் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.</td></tr>
</table></td><td>(ஏ) நிலையான சொத்துக்களை மீள – மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>(பீ) இந்த உத்தியோகத்தர்கள் நாட்டுக்கு வெளியால் இருந்ததனால் அவர்கள் எமது நிருவாக கட்டுப்பாட்டின் கீழில்லை அத்துடன் அவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவது தாமதமானதால் அவர்களுக்கெதிராக விரைவான நடவடிக்கை எடுப்பது எளிதான காரியமல்ல. எதிர்காலத்தில் கூடுமான வரைக்கும் இக்காலத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>இவ்வுத்தியோகத்தர்களுக்கான ஏற்பாட்டு நிதியத்தை விடுவிக்கும் வேளையில் அவர்களின் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.</td></tr>
</table>

**ஒப்பம் ∴ திருமதி. எம்.எம்.பி.டி. சமரசேகரா**
**பணிப்பாளர்**
**தொழிநுட்பவியல் நிறுவகம்**
**மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.**